# "பதில் அளிக்கப்படாத ஜெபங்கள்"?

## (15:24, 28, 30-33)

*1990ல், கேர்த் புரூக்ஸ் என்பவர் "பதில் அளிக்கப்படாத ஜெபங்கள்" என்ற தலைப்பில் ஒரு பாடலை வெளியிட்டார்.[1] அந்தக் கதையின் வரியானது. ஒரு குறிப்பிட்ட இளம்பெண் தனக்கு மனைவியாக வரவேண்டும் என்று ஊக்கத்துடன் ஜெபித்த இளைஞன் ஒருவனைப் பற்றியதாகும், ஆனால் அது நடைபெறவில்லை. பிற்பாடு வாழ்வில் அவன் அந்தப் பெண்ணை எதிர் கொண்டான் மற்றும் அவளைத் திருமணம் செய்திருந்தால் அது தவறாகியிருக்கும் என்று உணர்ந்தறிந்தான். பாடல் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "பதில் அளிக்கப்படாத ஜெபங்கள் என்பவை தேவனுடைய மாபெரும் கொடைகளில் சில என்பவையாக உள்ளன." ஒரு நாட்டுப்புற - மற்றும் - மேற்கத்திய நடிகர், தேவனைப் பற்றியும் ஜெபத்தைப் பற்றியும் பாடினார் என்ற உண்மையை நான் பாராட்டுகிறேன், ஆனால் அந்தப் பாடலின் இறையியலானது விரும்பத்தக்கதாக உள்ள சிலவற்றைவிட்டுச் செல்கிறது. தேவன் அந்த இளைஞனுடைய ஜெபத் திற்குப் பதில் அளித்தார், "இல்லை" என்பதே அவரது பதிலாக இருந்தது. தேவன் தமது பிள்ளைகளின் ஜெபங்களுக்கு எப்போதுமே பதில் அளிக்கிறார்,[2] ஆனால் அவர் எப்போதுமே "ஆம்" என்று பதில் அளிப்பதில்லை. சில வேளைகளில் "இல்லை" "சற்று காத்திரு" அல்லது வேறுசில ஏற்புடைய பதிலுரை என்பது அவரது பதிலாக உள்ளது.*

*"செய்தித்தொடர்பின் அவசியம் (15:14-29)" என்ற பாடத்தில் நாம், பவுல் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தின் முடிவுக் குறிப்புகள் பற்றிய ஒரு படிப்பைத் தொடங்கினோம். பவுல் தமது பயணத் திட்டங்களை வரைக்குறிப்பிட்டார் என்று நாம் குறிப்பிட்டோம். முதலாவது அவர், "எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாய" மாகப் பெற்றதை எடுத்துக்கொண்டு எருசலேம் செல்லுவார் (15:26). பின்பு அவர் ரோமாபுரிக்குப் பயணம் செல்வார், மற்றும் அங்கிருந்து அவர் ஸ்பானியாவுக்குச் செல்லத்திட்டமிட்டிருந்தார் (வசனங்கள் 24, 28). அந்தத் தகவலைப் பகிர்ந்துகொண்டபின்பு பவுல், தாம் நிறைவேற்றலாம் என்று நம்பியிருந்தவற்றை நிறைவேற்றும்படிக்குத் தமக்காக ஜெபிக்குமாறு, தமது வாசகர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்.[3] அவர், "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கூறினார் (வசனம் 30).[4]*

*பவுலின் வேண்டுகோள், உணர்வு மற்றும் ஊக்கத்தினால் நிறைந்தி*

ருந்தது. "உங்களை வேண்டிக்கொள்கிறேன் [*parakaleo*]" என்பது "I beg you" ["நான் உங்களைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்கிறேன்"] (JB), "I beseech you" ["நான் உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்"] (KJV), "I implore you" ["நான் உங்களிடம் இரந்து மன்றாடுகிறேன்"] (NEB) என்று அர்த்தப்படுகிறது.[5] அவர்களிடத்தில் அவர், "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும் [அடிப்படையில்]" மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.[6] அவர்கள் ஜெபித்தபோது, "பவுலுடன் கூட இரும்" என்ற ஒரு தெளிவற்ற முயற்சியற்ற ஒன்றை அவர் விரும்பவில்லை; அவர்கள் "தம்மோடுகூடப் *போராட வேண்டும்*" என்று அவர் கேட்டுக்கொண்டார். "போராட" என்பது *sunagonizomai* என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது: sun ["உடன்"] கூட்டல் *agonizomai* ("போராடுதல்"). *Agonizomai* என்ற வார்த்தையில் இருந்துதான் நாம், "agonize" என்ற வார்த்தையைப் பெறுகிறோம். *Sunagonizomai* என்பது விளையாட்டு நிழ்ச்சியில் விளையாடும் ஒரு குழுவானது ஒன்றுகூடி உழைத்து வெற்றிபெறுவதற்கு மா பெரும் முயற்சி மேற்கொள்வதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராகும்.[7] பவுல் தமது வாசகர்களிடத்தில், தமது ஜெபக்குழுவின் அங்கமாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பவுல் தமது வாசகர்கள் எந்த விஷயத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்பினார்? அவர், "மேலும் சகோதரரே, தேவசித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில் வந்து உங்களோடு இளைப்பாறும்படியாக, யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும், நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கும்" என்று சொன்னார் (வசனங்கள் 30, 31). இந்தப் பாடத்தின் எஞ்சிய பகுதியில் நாம், பவுலின் ஜெப வேண்டுகோள்களை ஏறக்குறைய நாள்வரிசை முறைமையில் கண்ணோக்குவோம். பவுல் விரும்பியது என்ன மற்றும் அவர் உண்மையில் பெற்றிக்கொண்டது என்ன என்பவற்றை நாம் ஒப்பிடுவோம். நாம் அறிந்துள்ளவரையில், ஒவ்வொரு வேண்டுகோளும் ஒரு "ஆம்" என்பதைக் கொண்டு பதில் அளிக்கப்பட்டது - ஆனால் ஒவ்வொரு "ஆம்" என்பதும் தகுதிகளைக் கொண்டிருந்தது. தகுதியுடனோ அல்லது தகுதியில்லாமலோ, பவுலின் ஜெபங்களில் எதுவும் "பதில் அளிக்கப்படாத ஜெபங்களாக" இருந்ததில்லை என்று நாம் உறுதியாகக் கூறமுடியும்.

## எருசலேமில் ஏற்றுக்கொள்ளப்படுதல்? (15:31ஆ)

**பவுல் விரும்பியது**

ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களிடம் பவுல், "நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப் போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கு" ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டார் (வசனம் 31ஆ). அவரது "எருசலேமுக்கான ஊழியம்" என்பது அங்கு தேவையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கான பொருள்சகாயமாக இருந்தது (காண்க - வசனங்கள் 25, 26). அந்தப் பணம்சேகரித்தலானது புறஜாதியார் மற்றும் யூதர்கள் ஆகியோருக்கு இடையில் இருந்த உறவை மேம்படுத்தும் என்று பவுல் நம்பினார். இருப்பினும், புறஜாதிக் கிறிஸ்தவர்களிடம் இருந்து வந்த கொடையை யூதக்கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், சூழ்நிலையானது இன்னும் சிறப்பாவதற்குப்

*பதிலாக மிகவும் மோசமாகிவிடும். நீங்கள் யாருக்கேனும் ஒரு கொடையைக் கொடுக்க முன்வந்து, அவர் அல்லது அவள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், நீங்கள் எவ்விதமாக உணர்வீர்கள்?*

*எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் அந்தக் கொடையை மறுக்கலாம் என்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. மனமேட்டிமை என்பது ஒரு காரண மாக இருக்கக்கூடும். சிலர் தங்களுக்கு உதவி மிகவும் தேவைப்படும்போதுகூட அதை ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு மிகவும் கர்வமாக இருக்கின்றனர். நாம் இரக்கத்துடன் கொடுப்பவர்களாக இருத்தல் தேவை என்பதுடன்கூட நாம் இரக்கத்துடன் பெறுபவர்களாகவும் இருக்க வேண்டியது அவசிய மாக உள்ளது. மீண்டுமாக, எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள், பவுலையும் அவரது ஊழியத்தையும் அங்கீகரிக்காதிருந்ததால் அவர்கள் அந்தக் கொடையை மறுக்கலாம். பவுல் முன்னதாக, யூதேயாவில்[8] இருந்த கிறிஸ்தவர்களின் எதிர்ப்பை எதிர்கொண்டிருந்தார் (காண்க நடபடிகள் 15:1, 2). அவர்கள் பவுலின் ஊழியத்தைஆதரிப்பவர்களாகத் தோன்றாதிருக்கும்படி, அந்த நிதிகளைப் பிடிவாதமாக மறுத்து விடலாம்.*

*புறஜாதியார் இருந்த சபைக்குழுமங்களில் இருந்து கிடைக்கப் பெற்றிருந்த அந்த உதவி, மறுக்கப்படுவதற்குச் சாத்தியம் இருந்தது என்பதைப் பவுல் அறிந்திருந்தார். ஆகவே அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக ஜெபிக்கும்படி, அவர் தமது வாசகர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்.*

### பவுல் பெற்றுக்கொண்டது

*அந்தக் கொடை ஏற்றுக்கொள்ளப்பட்டதா? அதை நாம் உறுதியாக் கூற இயலாது.[9] இருப்பினும், பவுல் எருசலேம் சென்று சேர்ந்தபோது, அங்கிருந்த சபை உறுப்பினர்கள் மற்றும் நடத்துனர்களால் பவுல் இரக்கத்துடன் வரவேற்கப்பட்டார் (காண்க நடபடிகள் 21:17-20அ). பிற்பாடு, ரோம தேசாதிபதி யாயிருந்த பேலிக்ஸ் என்பவரிடத்தில், "நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், ... [எருசலேமுக்கு] வந்தேன்" என்று பவுல் கூறினார் (நடபடிகள் 24:17). "தர்மப்பணம்" எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்கு ஏற்புடையதாக இருந்ததாகப் பெரும்பான்மையான எழுத்தாளர்களால் யூகிக்கப்படுகிறது. விஷயம் அப்படியிருந்தது என்றால், ஜெபத்தின் அந்தப் பகுதிக்குத் தேவன் "ஆம்" என்று பதில் அளித்தார் என்றாகிறது.*

*இருப்பினும் இந்த "ஆம்" என்பது தகுதிகளுடன் வந்தது: "ஆம், கொடை ஏற்றுக்கொள்ளப்படும், ஆனால் நீங்கள் உங்கள் வாழ்வை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கும் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டால் மாத்திரமே [அது ஏற்றுக்கொள்ளப்படும்]." நடபடிகள் 21ல் பவுல் எருசலேமிற்கு வந்து சேர்ந்தது பற்றிய விபரத்தைக் கண்ணோக்குங்கள். அங்கிருந்த சபையின் நடத்துனர்கள், அப்பகுதியிலிருந்த பல யூதக்கிறிஸ்தவர்கள் பவுலைக் குறித்துச் சந்தேகம் கொண்டுள்ளனர் என்றும், அவர் [பவுல்] தமது யூதப் பாரம்பரியத்தைக் கைவிட்டுவிட்டதாக நினைக்கின்றனர் என்றும் கூறினர் (வசனங்கள் 20ஆ, 21). அவர் காணிக்கை செலுத்தும் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கத் தேவாலயத் திற்குச் செல்ல வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர் (வசனங்கள் 22-25).[10] நாம் காணப்போகிறபடி, அவர்களின் நிபந்தனைக்குப் பவுல் இணங்கியபோது பேரிடர் விளைந்தது.*

எருசலேமில் [தாம்] ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற பவுலின் ஜெபத்திற்குத் தேவன் பதில் அளித்தாரா? நிச்சயமாகவே அவர் பதில் அளித்தார் - மற்றும் அவர் அனேகமாக, "ஆம்" என்று கூறினார். இருப்பினும் பதிலானது, "ஆம், *ஆனால்* ..." என்பதாக இருந்தது.

## எருசலேமில் பாதுகாப்பு? (15:31அ)

**பவுல் விரும்பியது**

பவுல், விசுவாசிகளிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதலை விரும்பியது மாத்திரமின்றி, அவிசுவாசிகளிடத்தில் இருந்து பாதுகாப்பையும் விரும்பி விழைந்தார்: "யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு[11] நான் தப்புவிக்கப்படும்படிக்கும்" (வசனம் 31அ). "யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகள்" என்பவர்கள், இயேசுவை மேசியா என்ற வகையில் ஏற்றுக்கொள்ள மறுத்திருந்து அவரைத் தங்கள் எஜமானர் என்ற வகையில் பின்பற்ற மறுத்த யூதர்களாக இருந்தனர்.

பவுல் எருசலேமில் கிறிஸ்தவரல்லாத யூதர்களால் தாம் எவ்வாறு நடத்தப்படலாம் என்பது பற்றிக் கவலைப்பட காரணம் கொண்டிருந்தார். அவர்களுக்கு அவர், விசுவாச துரோகியாக இருந்தார். அவரை என்றென்றைக்குமாக வாயடைப்பது தங்களின் பரிசுத்த கடமையாகும் என்று சிலர் கருதினர். அவரது ஊழியப்பயணங்களின்போது, யூதர்கள் அவரை ரோம அதிகாரிகளுக்கு முன்பாக இழுத்துச் சென்றிருந்தனர் (நடபடிகள் 18:12), அவரை அடித்திருந்தனர் (2 கொரிந்தியர் 11:24), மற்றும் அவரைக் கல்லால் எறிந்து கொல்ல முயற்சி செய்திருந்தனர் (நடபடிகள் 14:5). முன்னதாக, அவர் தமது மனமாற்றத்திற்குப் பின்பு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, சிலர் அவரைக் கொல்ல முயன்றனர் (நடபடிகள் 9:28, 29). R. C. பெல் என்பவர், "அவர் எருசலேமுக்குத் திரும்பிவரும்படி அவரைத் தூண்டியது, கிறிஸ்துவின்மீது அவர் கொண்டிருந்த முற்றான பயபக்தியும் தமது இனத்தார்மீது அவர் கொண்டிருந்த பட்சமான அன்பும் தானே தவிர வேறெதுவும்இல்லை" என்று எழுதினார்.[12]

பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதி முடித்தபின்பு, அவர் எருசலேமுக்குத் தமது பயணத்தைத் தொடங்கினார். அங்கிருந்த அபாயத்தை அவர் மிகச்சரியாக அறிந்திருந்தார் (காண்க நடபடிகள் 20:23; 21:4, 11); ஆனால் அவர், "எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக ... மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று கூறினார் (நடபடிகள் 21:13). இருப்பினும் அவர், தாம் மரிக்கப்போவது இல்லை - அதாவது தாம் ரோமாபுரிக்கும் ஸ்பானியாவுக்கும் செல்வார் என்று நம்பியிருந்தார். அவர் "யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு ... தப்புவிக்கப்படும்படிக்கு" ஜெபித்தார்.

"தப்புவிக்கப்படுதல்" என்பது பிடிபட்டுப் பின்பு தப்புவிக்கப்படுதலைக் குறிக்க வேண்டியது இல்லை என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். "தப்புவிக்கப்படுதல்" என்பதற்கான வார்த்தை, "[அபாயத்தில்] இருந்து பாதுகாத்தல்" என்று அர்த்தப்படக்கூடிய *rhuomai* என்பதன் ஒரு வடிவத்திலிருந்து வந்துள்ளது.[13] KJV வேதாகமத்தில் "delivered from" என்றுள்ளது. அவிசுவாசிகளுடனான *எவ்விதமான* மோதலில் இருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே பவுலின் முன் விருப்பத் தேர்வாக இருந்தது.

*பவுல் பெற்றுக்கொண்டது*

*தப்புவிக்கப்பட வேண்டும் என்ற பவுலின் ஜெபத்திற்குத் தேவன் பதில் அளித்தாரா? ஆம் - ஆனால் ஒருவேளை அது எவ்வாறு பதில் அளிக்கப்பட வேண்டுமென்று பவுல் எதிர்பார்த்தாரோ, அந்த வழியில் அது பதில் அளிக்கப்படவில்லை.*

*எருசலேமில் நேரிடவிருந்த அபாயம் பற்றிய பவுலின் கவலையானது உண்மைகளின் அடிப்படையில் அமைந்தது என்று நிரூபிக்கப்பட்டது. தேவாலயத்திற்குச் செல்ல வேண்டும் என்று சபையின் நடத்துனர்கள் கொடுத்த ஆலோசனைக்கு அவர் இணங்கிச் சென்றபோது, மிகமோசமான விஷயத்தை நம்பத் தயாராக இருந்த ஒரு கூட்டம் அங்கிருந்தது (நடபடிகள் 21:27-30). அந்தக் கும்பலானது பவுலை மரணத்திற்குள்ளாக்கும்படி அடிக்கப்போன வேளையில் (வசனங்கள் 31அ, 32ஆ), அவரைக் கர்த்தர் தப்புவித்தார். எவ்வாறு? ஒரு தூதனை அனுப்பியா? இல்லை. எருசலேமில் இருந்த சக கிறிஸ்தவர்கள் மூலமாகவா? இல்லை. கர்த்தர், எருசலேமில் பவுலைக் கைதியாக்கி இட்டுச்சென்ற ரோமப் போர்ச்சேவகர்கள் மூலமாக அவரைத் தப்புவித்தார் (வசனங்கள் 31-34).*

*இதற்குச் சற்று பிற்பாடு, நாற்பது யூதர்கள் "தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டார்கள்" (23:12; காண்க வசனம் 13). மீண்டுமாகக் கர்த்தர் பவுலை - அந்த அப்போஸ்தலரின் மைத்துனனை [சகோதரியின் மகனை] (வசனங்கள் 16-22)யும் ரோமப் போர்ச்சேவகர்களில் சிலரையும் பயன்படுத்தி - தப்புவித்தார். போர்ச்சேவகர்கள் அவரைக் கட்டி செசரியாவுக்கு இட்டுச்சென்றனர், அங்கு அவர் சிறையில் அடைக்கப்பட்டார் (வசனங்கள் 23-35). இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு, யூதர்கள் பவுலுக்காகப் பதுங்கியிருந்து அவரைக் கொலை செய்யத்திட்டமிட்டனர் (25:1-3). இந்த வேளையில் கர்த்தர் பவுலை, அந்த அப்போஸ்தலர் ரோமக்குடிமகன் என்ற தமது உரிமையைப் பயன்படுத்தி இராயருக்கு அபயமிடுதலைக் கொண்டு தப்புவித்தார் (வசனங்கள் 9-12). பல ஆண்டுகளுக்கு முன்பாக அவர் பிறந்தபோதே ரோமக்குடி மகனாக இருக்கும் வாய்ப்பை அவருக்குக் கர்த்தர் அளித்ததன் மூலமாக, இந்தத் தப்புவித்தலுக்கு அவர் ஆயத்தம் பண்ணியிருந்தார் (காண்க 22:25-28).[14]*

*மீண்டும் ஒருமுறை, பவுலின் ஜெபத்திற்கு, தகுதியுடைய ஒரு "ஆம்" என்பது தேவனுடைய பதிலாக இருந்தது: "ஆம், நீ அவிசுவாசிகளிடத்திலிருந்து விடுவிக்கப்படுவாய், ஆனால் நீ ஒருக்காலும் எதிர்பார்த்திராத வழிகளில் அவ்வாறு தப்புவிக்கப்படுவாய்." மீண்டுமாக "ஆம், ஆனால் ..." என்பது தேவனுடைய பதிலாக இருந்தது.*

## *ரோமாபுரிக்குப் பயணம்? (15:32)*

*பவுல் விரும்பியது*

*ரோமாபுரிக்குப் பயணம் செய்தல் குறித்துப் பவுல் நீண்ட காலமாக ஜெபித்திருந்தார் (காண்க ரோமர் 1:9அ, 12). இப்போது நமது வேதவசனப் பகுதியில், பவுல் எருசலேமில் ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் தப்புவிக்கப்படுதல் ஆகியவற்றிற்கான தமது விருப்பத்தைக் குறிப்பிடுவதற்கு முன்பு, "தேவசித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில்*

வந்து உங்களோடு இளைப்பாறும்படியாக" (15:30) என்று அவர் கூறினார். அவர் விரும்பியவாறே எருசலேமில் யாவும் நடந்திருந்தாலும், அது இன்னமும் மன இறுக்கம் நிறைந்த வேளையாகவே இருந்திருக்கும். கடைசியில் ஒருவழியாக, ரோமாபுரி நகர் சென்று சேர்ந்து அங்கிருந்த கிறிஸ்தவர்களுடன் இணைவினால் புத்துணர்வடைவது என்ன ஒரு சந்தோஷ மாக இருக்கும்! J. B. பிலிப்ஸ் என்பவரின் பொழிப்புரையில், "பின்பு நான் உங்களிடத்திற்கு ... சந்தோஷமான இருதயத்துடன், ஒரு சிறு விடுமுறையை உங்களுடன் மகிழ்ச்சியாக அனுபவிப்பதற்காக என்பதுபோன்று கூட வருவேன்" என்றுள்ளது.

#### பவுல் பெற்றுக்கொண்டது

ரோமாபுரிக்குச் செல்ல வேண்டும் என்ற பவுலின் ஜெபத்திற்குத் தேவன் பதில் அளித்தாரா? நிச்சயமாகவே பதில் அளித்தார். இருப்பினும் மீண்டும் இந்த "ஆம்" என்பது தகுதிகளைக் கொண்டிருந்தது.

சாதாரண சூழ்நிலைகளின்கீழ், எருசலேமுக்கும் பின்பு அங்கிருந்து ரோமாபுரிக்கும் செல்வதற்குப் பவுலுக்குச் சுமார் மூன்று மாதங்கள் தேவைப்பட்டிருக்கும். அந்த மூன்று மாதப்பயணத்திற்குப் பதிலாக அவருக்குச் சற்றேறக்குறைய மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டது. பவுல் கால அட்டவணையற்ற குறைந்தது இரண்டு ஆண்டுகளாக செசரியாவில் சிறைவைக்கப்பட்டிருந்தார் (நடபடிகள் 24:27 காணவும்). அவர் இராயருக்கு அபயமிட்டபின்பு, ரோமாபுரி செல்லும் கடற்பயணத்தில், கால அட்டவணையிடப்படாத மூன்று மாதங்களை, மெலித்தா தீவில் அவர் செலவிட்டார் (காண்க 28:11அ).

ஒரு சுவிசேஷ ஊழியராக, கிறிஸ்துவுக்குள்ளான தமது சக சகோதர சகோதரிகளின் தோழமையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க விடுதலையான நிலையில் ரோமாபுரிக்குச் சென்று சேர்வதற்கு மாறாக, அவர் ஒரு கைதியாக அங்கு சென்று சேர்ந்தார். "கடந்து செல்லும் வழியில்" ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களைப் பார்த்துவிட்டுப் பின்பு ஸ்பானியா நாட்டிற்குச் செல்வதற்குப் பதிலாக (ரோமர் 15:24), அவர் இராயருக்கு முன்பாக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படக் காத்திருந்த, அடுத்த இரண்டு ஆண்டுகளை, விலங்கிடப்பட்ட நிலையில் ரோமாபுரியில் செலவிட்டார் (காண்க நடபடிகள் 28:30). மீண்டும் ஒருமுறை "ஆம், ஆனால் ..." என்பதே தேவனுடைய பதிலாக இருந்தது: "ஆம், நீ கடைசியில் ரோமாபுரி சென்று சேர்வாய், ஆனால் நீ முன்கண்ணோக்கிய வழியில் அங்கு சென்று சேர்வதில்லை."

## ஸ்பானியாவில் சுவிசேஷ ஊழியம்? (15:24, 28, 32)

#### பவுல் விரும்பியது

ஜெபத்திற்கான பவுலின் வேண்டுகோளில், ஸ்பானியா பற்றிய திட்ட வட்டமான குறிப்பு எதுவும் இல்லை, ஆனால், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களால் புத்துணர்வு அடைவதைப் பற்றி அவர் பேசுகையில், முன் மொழியப்பட்ட அந்தப் பயணமானது பவுலின் சிந்தனையில் நிச்சயமாகவே இருந்தது (வசனம் 32). சற்று முன்னதாக அவர், ரோமாபுரியில் அவர்களின்

தோழமையைமகிழ்வுடன் அனுபவித்த பின்பு, ஸ்பானியாவுக்குச் செல்ல அவர்களால் வழிவிட்டு அனுப்பப்படுவார் என்று தாம் நம்பியிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார் (வசனம் 24; காண்க வசனம் 28). ரோமப்பேரரசின் மேற்குப் பகுதிகளில் பவுல் தமது முயற்சிகளை விரிவாக்குதல் பற்றி ஜெபிக்காது இருந்தார் என்று கற்பனை செய்தல் கடினமானதாக இருக்கும்.

**பவுல் பெற்றுக்கொண்டது**

பவுல் ஸ்பானியாவுக்குச் சென்று சேர வேண்டும் என்று ஜெபித்தார் என்பதாக யூகித்த நிலையில் நாம், "தேவனுடைய பதில் என்னவாக இருந்தது? பவுல் ஸ்பானியாவுக்குச் சென்றாரா?" என்று வியப்படைகிறோம். அந்தக் கேள்விகளுக்கு நாம் நிச்சயமான பதில் அளிக்க முடியாது. சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், "அவர் அதைச் செய்தார் என்பதற்கு, புதிய ஏற்பாட்டிலோ அல்லது தொடக்ககால [சபை] எழுத்தாளர்களின் எழுத்துக்களிலோ, வரலாற்றுப் பூர்வமான பதிவு எதுவும் இல்லை" என்று கூறினார். பின்பு ஹோட்ஜ், இருப்பினும் "இந்த எழுத்தாளர்களில் பெரும்பான்மையானவர்கள் அது நடந்திருக்கும் என்பதாக ஏற்றுக்கொள்கின்றனர்" என்றும் கூடுதலாகக் கூறினார்.[15] ரோமாபுரியைச் சேர்ந்த கிளெமென்ட் என்பவர், பவுலைப் பற்றி பின்வரும் வார்த்தைகளை எழுதினார்: "அவர் முழு உலகத்திற்கும் நீதியைப் போதித்து, மேற்கின் [பவுலின் நாட்களில் ஸ்பானியா தான் ரோமப்பேரரசின் மேற்கு எல்லையாக இருந்தது] எல்லைகளைச் சென்றடைந்த நிலையில் அவர் ஆட்சியாளர்களுக்கு முன்னால் தமது சாட்சியை விளங்கச் செய்தார்."[16] பவுல் ஒரு இலக்கில் தமது சிந்தையை வைத்திருக்கும்போது பக்கவழியில் சென்று நிலைக்க மறுத்த மனிதராக இருந்தார்,[17] எனவே அவர் ஸ்பானியாவில் ஊழியம் செய்யும்படியான தமது திட்டங்களைப் பிற்பாடு செயல்படுத்தியிருக்க நிச்சயமாகவே சாத்தியக்கூறு உள்ளது. இருப்பினும், இதை நிச்சயமான வகையில் நாம் அறிவதில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன்.

பெரும்பான்மையான கல்வியாளர்கள், நடபடிகள் புத்தகத்தின் முடிவுப்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்குச் சற்றுப் பின்னர், பவுல் இராயருக்கு முன்பாக நிறுத்தப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார் என்றும் அவர் தமது பயணங்களைத் திரும்பவும் தொடர்ந்தார் என்றும் நம்புகின்றனர். அனேகமாக இந்த வேளையில்தான் பவுல் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை எழுதியிருப்பார். பின்பு ரோம அதிகாரிகளின் துன்புறுத்துதல் தொடங்கி பவுல் மீண்டும் கைதுசெய்யப்பட்டு, கடைசியாக அவருக்குமரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என்று நம்பப்படுகிறது (காண்க 2 தீமோத்தேயு 4:6-8). பவுல் ஸ்பானியாவுக்குச் சென்றிருந்தார் என்றால், அது ரோமாபுரியில் அவரது [இருமுறை] சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு இடையில் அவர் விடுதலையாகி இருந்த வேளையில்தான் நடைபெற்றிருக்க வேண்டும்.

பவுல் ஸ்பானியாவுக்குச் செல்ல முடியாதிருந்தது என்றால், "இல்லை, ஆனால் நீ செய்வதற்கு வேறு முக்கியமான வேலைகள் என்னிடத்தில் உள்ளன" என்பது தேவனுடைய பதிலாக இருந்தது. பவுல் ஸ்பானியாவுக்குச் சென்றிருந்தார் என்றால், "ஆம், ஆனால் ..." என்பது மீண்டும் தேவனுடைய பதிலாக இருந்தது: "ஆம், ஆனால் நீ செல்வதற்கு முன்பு திட்டமிட்டதைக் காட்டிலும் அதிகநாட்கள்

காத்திருக்கப் போகிறாய்." எவ்வகையிலும் தேவன் பவுலின் ஜெபத்திற்குப் பதில் அளித்தார் என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியும்.

## முடிவுரை (15:33)

பவுல் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களைத் தம்முடன் ஜெபங்களில் போராடும்படி கேட்டுக்கொண்ட பின்பு, அவர் (அடிக்கடி செய்துள்ளது போன்றே [15:5, 6, 13]) ஒரு சுருக்கமான ஆசீர்வாதத்தை உட்செருகினார்: "சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்" (வசனம் 33). "சமாதானம்" (*shalom* என்பதற்குச் சமானமான *eirene* என்ற கிரேக்க வார்த்தை) என்பது எபிரெய மொழியில் பொதுவான ஒரு வாழ்த்துதலாக இருந்தது. புறஜாதியாருக்கான யூதத்துவ அப்போஸ்தலர், அனேகமாக புறஜாதியார் அதிகமாக இருந்திருக்கக்கூடிய ஒரு சபைக்குழுமத்தின் மீது யூதத்துவத் திற்கே உரிய தனிப்பட்ட வகையிலான ஆசீர்வாதத்தை வழங்கினார்.

நாம் இந்தப் பாடத்தை, "பதில் அளிக்கப்படாத ஜெபங்கள்" என்ற பாடலைக் குறிப்பிட்டுத் தொடங்கினோம். பாடல் எழுதுபவர்களின் நல்லெண்ணங்கள் இருந்த நிலையிலும் நாம், கர்த்தருக்கு நெருக்கமாக இருப்பவர்களுக்கு பதில் அளிக்கப்படாத ஜெபங்கள் என்று எதுவும் இல்லை என்று நாம் கருத்துத் தெரிவித்தோம். நாம் விரும்புகிற வழியில் நமது ஜெபங்கள் ஒவ்வொன்றுக்கும் தேவன் பதில் அளிக்காது இருக்கலாம், ஆனால் - பதிலானது அவர் பவுலுக்குக் கொடுத்த "ஆம், ஆனால் ..." என்பதாக இருந்தாலும்கூட - கர்த்தர் பதில் அளிப்பார்[18] என்பதில் நாம் நிச்சயமாயிருக்க முடியும்.

பவுல் தேவனுடைய பதில்களில் திருப்தியடைந்தாரா? 30ம் வசனத்தில் உள்ள "தேவசித்தத்தினாலே" என்ற வார்த்தையைத் தவறவிடாதீர்கள்: "மேலும் சகோதரரே, *தேவசித்தத்தினாலே* நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில் வந்து உங்களோடு இளைப்பாறும்படியாக." பவுல் தமது சித்தத்திற்கு மேலாக தேவனுடைய சித்தத்தை இடுவதற்கு எப்போதுமே தயாராக இருந்தார் (காண்க ரோமர் 1:10; 1 கொரிந்தியர் 4:19). ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "தேவனு டைய சித்தத்தை நமது சித்தத்திற்கு ஏற்ப வளைத்தல் என்பதல்ல, ஆனால் நமது சித்தத்தை அவரது சித்தத்திற்கு ஏற்ற வகையில் வரிசையில் அமைத்தல் என்பதே ஜெபத்தினுடைய நோக்கமாக உள்ளது" என்று எழுதினார்.[19]

"பதில் அளிக்கப்படாத ஜெபங்கள்" என்ற பாடலை எழுதியவர்கள் சரியான வார்த்தை அமைப்பைப் பயன்படுத்தாது இருந்திருக்கலாம், *ஆனால்* அவர்கள் சரியான அடிப்படைக் கருத்தைப் பெற்றிருந்தனர். தேவன் நமது ஜெபங்களுக்கு, "இல்லை" - அல்லது "ஆம், ஆனால் ..." என்று கூட - பதில் அளிக்கும்போது தேவனுடைய மாபெரும் ஆசீர்வாதங்களில் சில நமக்குத் தரப்படுகின்றன.

---

குறிப்புகள்

[1]Pat Alger, Larry Bastian, and Garth Brooks, "Unanswered Prayers" (1990). [2]தேவன் தமது பிள்ளைகளின் ஜெபங்களுக்கு எப்போதுமே பதில் அளிக்கிறார், ஆனால் அவருடைய பிள்ளைகளாயிராதவர்களுக்கு இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் எதுவும் இருப்பதில்லை. [3]பவுல் தமக்காக ஜெபிக்கும்படி தமது வாசகர்களிடத்தில் அடிக்கடி கேட்டுக்கொண்டார் (காண்க 2 கொரிந்தியர் 1:11; எபேசியர் 6:19; கொலோசெயர் 4:3; 1 தெசலோனிக்கேயர்

*5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1).* [4]*இது தேவத்துவத்தின் மூன்று நபர்களையும் குறிப்பிடும் வகையில் புதிய ஏற்பாட்டில் உள்ள பல வசனங்களில் ஒன்றாக உள்ளது: தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர். (காண்க மத்தேயு 3:16, 17; 28:19; ரோமர் 8:9, 11; 2 கொரிந்தியர் 13:14; எபேசியர் 2:18; 1 பேதுரு 1:2.)* [5]*ரோமருக்கு எழுதிய நிருபம், 4 என்ற புத்தகத்தில் "மறுரூபமாக்கப்பட்ட வாழ்வு (12:1, 2)" என்ற பாடத்தில் parakaleo என்பதன் மீதான குறிப்புகளைக் காணவும்.* [6]Adapted from Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 490. [7]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 284. [8]*யூதேயா என்பது பலஸ்தீன நாட்டின் தெற்கு மாகாணமாக இருந்தது. அந்த மாகாணத்தில் எருசலேம்தான் முக்கிய நகரமாக இருந்தது.* [9]*நடபடிகள் புத்தகத்தில் பவுலின் பயணங்கள் பற்றிய விபரத்தில், இந்தப் பொருள்சகாயம் பற்றி லூக்கா கொஞ்சம்தான் கூறினார்.* [10]*இந்த ஆலோசனையானது சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய அபாயத்தை முன்னிறுத்திற்று; ஆனால் "எல்லாருக்கும் எல்லாமுமாக" இருக்க ஆவல் கொண்டிருந்த (1 கொரிந்தியர் 9:22) பவுல், இதற்கு இணங்கினார்.*

[11]*இவ்விடத்தில் ஆங்கிலத்தில் இப்புத்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள* New American Standard Bible®, *வேதாகம மொழிபெயர்ப்பில் "கீழ்ப்படியாத" என்றுள்ளது. இதற்குப் பதிலாக வேறு சில மொழிபெயர்ப்பு வேதாகமங்களில் "அவிசுவாசிகளான" அல்லது அதற்குச் சமமான வார்த்தை உள்ளது; தமிழ் வேதாகமத்திலும் இவ்விடத்தில் "அவிசுவாசிகளுக்கு" என்றுதான் உள்ளது; ஆனால் கிரேக்க வசனத்தில் "கீழ்ப்படியாத" என்று அர்த்தம் கொண்ட வார்த்தையே இவ்விடத்தில் உள்ளது. மீண்டும் ஒருமுறை பவுல், கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்தின் முக்கியத்துவத்தைக் காண்பித்தார்.* [12]R. C Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 183. [13]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 157. [14]*பவுலின் ரோமக்குடியுரிமை பற்றி* Roper, *333-36ல் கலந்துரையாடப்பட்டுள்ளது.* [15]Charles Hodge, *Romans,* The Crossway Classic Commentaries (Wheaton, Ill.: Crossway Books, 1993), 387. [16]Clement of Rome *1 Clement* 5:7. [17]*பவுல் தமது இரண்டாவது சுவிசேஷ ஊழியப்பயணத்தில், ஆசியா மாகாணத்திற்குச் செல்ல விரும்பினார், ஆனால் அதை ஆவியானவர் அனுமதிக்கவில்லை (நடபடிகள் 16:6). பிற்பாடு பவுலின் மூன்றாவது பயணத்தில், அவர் எபேசுவுக்குச் சென்று சேர்ந்தபோது அவர் கடைசியில் ஆசியாவில் இருந்தார் (காண்க நடபடிகள் 18:19-21; 19:1).* [18]*உங்கள் சொந்த ஜெப வாழ்வில் இருந்து தனிப்பட்ட உதாரணங்களை இவ்விடத்தில் உள்ளடக்க நீங்கள் விரும்பலாம்.* [19]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 389.